பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 12 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. காசநோய் ஒழிப்புக்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. 2047-ஆம் ஆண்டுக்குள் கடல்சார் துறையில் இந்தியா முதல் பத்து நாடுகள் பட்டியலில் இடம்பெறும் என்று கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தில் பெஞ்சால் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்தில் மத்திய குழுவினர் இன்று பார்வையிட்டனர்.
4. தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக வரும் பத்தாம் தேதி முதல் தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 128 ரன் எடுத்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

காசநோயை முற்றிலுமாக ஒழிக்க அதிக பாதிப்புள்ள மாவட்டங்களில் 100 நாள் சிறப்பு இயக்கத்தை மத்திய அரசு இன்று தொடங்கியுள்ளது.

33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 347 மாவட்டங்களில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில், காசநோயை கட்டுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவியை இருமடங்காக்குவது, புதிய வகை மருந்துகளை அளிப்பது, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது, நோய் கண்டறிவதற்கான தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

இந்நோயை முற்றிலுமாக ஒழிக்க அனைத்து தரப்பினரும் தமது பங்களிப்பை அரசுக்கு அளிக்க வேண்டுமென்று திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஹரியானா மாநிலத்தின் பஞ்ச்குலாவில் காசநோய் ஒழிப்புக்கான 100 நாள் சிறப்பு இயக்கத்தை இன்று தொடங்கி வைத்து பேசிய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா, காசநோய் இல்லாத

இந்தியாவை உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

2025-ஆம் ஆண்டுக்குள் இந்நோயை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசு கொண்டு வந்துள்ளதாக அவர் கூறினார்.

நோயை ஒழிப்பதற்கான செயல்பாடுகளில் மாற்றங்கள் இருந்தாலும், இலக்கை எட்டுவதில் அரசு உறுதியுடன் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.,

ஆயூஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காச நோயாளிகளுக்கு உயர் சிகிச்சை அளிக்கப்படுவதாகவும், பிரதமரின் மக்கள் நல திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டு வருவதாக்ம் ளதிரு ஜெ பி நட்டா குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

2047-ஆம் ஆண்டிற்குள் உலக அளவில் கடல்சார் துறையில் இந்தியா முதல் பத்து நாடுகளின் பட்டியிலில் இடம்பெறும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னை காமராஜர் துறைமுகத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டங்களில் பங்கேற்று அவர் பேசினார்.

கடல்சார் துறையில் சுயசார்பு இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு கப்பல் கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேம்படுத்தவும், சரக்கு கையாளும் திறனை உயர்த்தவும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதகாவும் அவர் தெரிவித்தார்.

கடல்சார் துறையில் கட்டுமானப் பணிகள் தரமாகவும், குறித்த நேரத்தில் முடிப்பதற்கும் உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் கடல்சார் தொடர்பான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதில் மத்திய அரசுக்கு அனைத்து ஒத்துழைப்பையும் தமிழக அரசு அளித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஏ வ வேலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக சென்னையில் உள்ள தென்னிந்திய ஹிந்தி பிரச்சார சபையின் 83-வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவ மாணவியருக்கு எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியருக்கு பிரவின், விஷாரத் பட்டங்களை திரு சர்பானந்த சோனாவால் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், நாட்டின் பல்வேறு மொழிகளும் மக்களை ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற இணைப்பின் கீழ் கொண்டு வருவதாக தெரிவித்தார்.

தென்மாநிலங்களில் ஹிந்தி மொழியின் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் ஐந்து பேருக்கு விருதுகளை வழங்கி அவர் கௌரவித்தார்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக சி சுப்ரமணியம் ஆற்றிய அரும் பணிகளையும் திரு சர்பானந்த சோனாவால் நினைவு கூர்ந்தார்.

[]<<<>>>[]

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 58 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பிலான மூன்று முடிவுள்ள பணிகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

சென்னையை அடுத்த முடிச்சூரில் ஐந்து ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள தனியார் ஆம்னி பேருந்துகளுக்கான நிறுத்தும் இடம், கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் கட்டப்பட்டுள்ள காலநிலைப் பூங்கா, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க மருத்துவ சிகிச்சை மையம் ஆகியவற்றை முதலமைச்சர் இன்று திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் உள்ள கைவினை கலைஞர்களை தொழில் முனைவோர்களாக உயர்த்துவதற்கான மாநில அரசின் திட்டத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ளுமாறு சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மூன்று லட்சம் ரூபாய் வரை ஐந்து சதவீத வட்டியுடன் கடனுதவி வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மர வேலைப்பாடுகள், படகு தயாரித்தல், உலோக வேலைப்பாடுகள், பூட்டு தயாரித்தல், மண்பாண்டங்கள் தயாரித்தல் உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட தொழில்களுக்கு கடனுதவி வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆண்டுக்கு குறைந்தபட்சம் பத்தாயிரம் கைவினைஞர்கள் பயன்பெறும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு தா மோ அன்பரசன் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் பெஞ்சால் புயலால் ஆறாயிரத்து 675 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதனை தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மத்திய அரசு வழங்க வேண்டுமென்று மாநில நிதி அமைச்சர் திரு தங்கம் தென்னரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

விருதுநகர் மல்லாங்கிணறில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யாமல் மாநில ஒதுக்கீட்டிலிருந்து தொள்ளாயிரத்து 44 கோடி ரூபாய் மட்டுமே தற்போது வழங்கி உள்ளதாகக் கூறினார்.

தென்தமிழகத்தில் மிஜ்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிப்பு ஏற்பட்டபோதும் மத்திய அரசு 276 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்ததாகவும் திரு தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் பெஞ்சால் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்தில் ஏழு பேர் கொண்ட மத்திய குழுவினர் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்திலும் பங்கேற்று ஆலோசனை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சுரேஷ் / -- 47 செண்ட்*

**[]<<<>>>[]**

தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வரும் பத்தாம் தேதி முதல் தமிழகத்தில் ஒருசில இடங்களில் இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) -40--- செகண்ட்*

கடல் கொந்தளிப்பாக காணப்படும் என்பதால் வங்கக்கடல் பகுதிக்கு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

சேலத்தில் இன்று நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் மாற்றுத்தினாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**[]<<<>>>[]**

ஈரோடு மாவட்டம் அந்தியூரில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடை கணக்கெடுக்கம் பணி இன்று தொடங்கியது.

[]<<<>>>[]

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பகுதியில் உள்ள அலையாத்தி காட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல வனத்துறை அனுமதி வழங்கியுள்ளது.

[]<<<>>>[]

கன்னியாகுமரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டஙட்களில் காசநோய் ஒழிப்பு குறித்த 100 நாள் விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை ஆட்சியர்கள் இன்று தொடங்கி வைத்தனர்.

[]<<<>>>[]

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 128 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 337 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 180 ரன்

***End of News***